# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்


காலாண்டிதழ்

ஜனவரி – 2016

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550






visit us: www.pallavipathippakam.in | DOAJ Google

முனைவர் அ. சத்யா


# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550

மலர் : 4 ஜனவரி - 2016 இதழ் : 1



**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.


**இணை ஆசிரியர்**
**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**சிறப்பாசிரியர்**
**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**துணை ஆசிரியர்**
**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**ஆசிரியர்**
**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**பதிப்பாசிரியர்**
**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.





**0424**
**4562211,2263197**
**94422 51549**
**96291 82383**

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**

## பல்லவி பதிப்பகம்

194,கண்ணா காம்ளக்ஸ் , இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு-638011.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1.சோழ நாட்டின் மருமகள் காவேரி - | முனைவர்.க.ஆனந்தி | 5 |
| 2.இயேசு காவியத்தில் உவமைகள் - | முனைவர்.தா.க.அனுராதா | 8 |
| 3.குழந்தைப் பாடல்களில் கல்வி - | சு.அய்யனார் | 11 |
| 4.குறுந்தொகை வழிபாடு - | அ.ஜெனார்த்தலிபேகம் | 14 |
| 5.அறமும் புறமும் காட்டும் கல்வி - | சு.கௌரி | 17 |
| 6.தமிழ்மொழி வளர்ச்சியில் தெளிதமிழ் திங்களிதழ் - | க.கண்ணன் | 22 |
| 7.வழிபாட்டில் பண்பாடு - | பேரா.முனைவர்.மு.குருவம்மாள் | 25 |
| 8.கடல்சார் மக்கள் வாழ்வு ஆறுகாட்டுத்துறை புதினத்தை முன்வைத்து - | முனைவர்.வீ.மீனாட்சி | 26 |
| 9.பக்தியில் ஆண்டாளும் மீராவும் - | முனைவர்.க.மீரா | 29 |
| 10.தாலாட்டுப் பாடல்கள்-சிறப்பு - | முனைவர்.க.முத்தழகி | 32 |
| 11.வணிக நாவல்களில் பாத்திரபடைப்பு - | G.பிரதிபா | 35 |
| 12.பிரபஞ்ச வைராக்கியம் - | முனைவர்.ப.பிரியா | 38 |
| 13.இரந்தார்க்கு இன்முகம் - | முனைவர்.மு.புஷ்பாரெஜினா | 40 |
| 14.ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்ணியம் - | து.புஷ்பவள்ளி | 43 |
| 15.சங்க அக இலக்கியங்களில் முல்லை வருணனை - | ச.ராஜேஸ் | 46 |
| 16.பெருஞ்சொல்லகராதியின் அமைப்பும் சிறப்பும் - | முனைவர்.சு.சத்தியா | 50 |
| 17.பண்டைய இலக்கியத்தில் விழாக்கள் - | முனைவர்.பி.சேதுராமன் | 56 |
| 18.இரட்டைக் காப்பியங்களில் பெண்களின்' சிறப்புக்களும் பாவேந்தரின் ஒத்தக்கருத்து - | மா.விஜயலெட்சுமி | 60 |
| 19.இல்வாழ்வின் மேன்மை; திருக்குறளும் இன்னிலையும் - | முனைவர்.மு.வையபுரி | 63 |
| 20.தொடக்க நிலையில் தமிழ்பாடம் கற்பித்தல் திறன் - | முனைவர் மெ.வனிதா | 66 |
| 23.தமிழில் விளிம்புநிலைத் தன்வரலாறுகள் - | எம்.எம்.ஜெயசீலன் | 78 |
| 21.சங்க இலக்கியத்தாவரங்களின் மருத்துவப் பயன்கள் (பிரண்டை, பீரம்) - | பா.ஆரோக்கியதாஸ் | 71 |
| 22.குறுந்தொகையில் மலர்கள் - | தா.பத்மா | 74 |
| 24.உலக அரங்கில் எதிர்ப்புக் கவிதை வரலாறு - | திரு.செல்லத்துரைசுதர்சன் முனைவர்.போ.சத்தியமூர்த்தி | 84 |

# பிரபஞ்ச வைராக்கியம்

**முனைவர் ப.பிரியா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

**மா**ணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் திருவாதவூரில் சைவ அந்தணர் குலத்தில் பிறந்தவர். இவரது ஊர்ப்பெயரால் திருவாதவூரர் என்று அழைக்கப்பட்டார். அறிவாற்றலில் சிறந்து விளங்கிய இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்தவர். அவ்வமயம் மன்னனால் "தென்னவன் பிரம்மராயன்" எனும் பட்டமளித்துப் பாராட்டப்பெற்றார்.

வாதவூரர் இறைவனை சன்மார்க்க நெறியில் வழிபட்டார். பரி வாங்கச்சென்ற போது இவருக்கு திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் ஞான ஆசிரியன் திருக்கோலங் கொண்டு ஆட்கொண்ட எம்பெருமான் "இன்னும் சிலநாள் இவண் இருப்பாயாக" என அருளினார். அக்குருவின் பிரிவாற்றாமல் மனங்கலங்கி திருஉத்திரகோச மங்கையை அடைந்தார்.

உலக வாழ்வின் பற்றினை அறவே விடுத்து இறைவனோடு இரண்டறக்கலக்க வேண்டும் என்ற நோக்கில் உத்தரகோச மங்கையில் சென்று பாடியதே "பிரபஞ்ச வைராக்கியமான நீத்தல் விண்ணப்பம்" என்ற திருவாசகம் ஆகும்.

**இறைவன் ஆட்கொண்ட விதம்**

திருவாதவூரர் சிவபெருமான் தன்னை ஆட்கொண்ட தன்மையைக் கூறுகிறார். கடைப்பட்ட என்னை நின் கருணையினால் ஆட்கொண்டாய். கள்வனாகிய நான் உன்னை விட்டு நீங்கி நிற்கக் கண்டும் என்னை வலிய வந்து அடிமை கொண்டு, பசு பாசத்தை அறுத்து என்னையும் ஒரு பொருளாக ஆட்கொண்டவன் இதனை,

**"கடையவனேனைக் கருணையினால்**
**கலந்து ஆண்டு கொண்ட"** (நீத்தல் விண்ணப்பம் : 1)

என்றும்,

**"பல்லோரும் காண எந்தன்**
**பசு பாசம் அறுத்தானை"** (கண்டப் பத்து)

என்ற பாடல் வழி கூறுகின்றார். உயிர் இறைவனை விட்டு புலன் மயக்கத்தில் மகளிர் பால் மயக்கம் கொண்டு புறம் போன என்னை கைவிட்டு விடாதே! முன் ஆட்கொண்ட விதத்தைக் கூறி உத்திர கோச மங்கைக்கு அரசே! மீண்டும் எனை ஆண்டருள் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார்.

**இறைவனின் தன்மை**

நிலைபெற்ற உத்திர கோச மங்கைக்குத் தலைவனே! பஞ்சபூதமானவனே! விண்ணே! மண்ணே! தீயே! காற்றோடு நீருமானவனே! கோமளமே! அறிதற்கு அரிய பொருளாய் விளங்குபவனே! பெண்ணாகவும் ஆணாகவும் அலியாகவும் உள்ளவனே! என நீத்தல் விண்ணப்பத்தில் பாடுகிறார்.

இக்கருத்தை,

**“அம்பரமெ நிலமே அனல் காலொடு**

**ஆப்பு ஆனவனே”(20)**

**“பெண்மையனே**

**தொன்மை ஆண்மையனே அலிப் பெற்றியனே” (22)**

என்ற பாடலடி விளக்குகின்றது.

இக்கருத்தையே,

**“பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்**

**விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி”**

என்று திருவெம்பாவையில் பாடுகின்றார்.

**கைவிடாமல் காக்க**

இறைவன் தனது கருணையினால் என்னை ஆட்கொண்ட போதும், அதனை விடுத்து உலக வாழ்வில் மயக்கம் கொண்டு திரிந்த என்னைக் கைவிடாமல் காக்க வேண்டும். இதுவே நின் பெருங்கருணைக்கு சால சிறப்புடையதாகும்.

**“வளர்கின்ற நின் கருணைக் கையில்**

**வாங்கவும் நீங்கி இப்பால்**

**மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்” (பா. 4)**

என்றும்

**“மறுத்தனன் யான் உன் அருள்**

**அறியாமையின் என்மணியே**

**வெறுத்து என்னைநீ விட்டிடுதி கண்டாய்”**

என்ற பாடல் கருணையின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.

**உவமைகள்**

1.யானைகளின் கொடிய போரில் சிறுசெடி எப்படி அழிந்தொழியுமோ அதுபோல ஐம்புலன்களால் என்மனம் அல்லல்படுகிறது.

2.பெருந்தீயில் உருகி மாய்ந்திடும் வெண்ணெய் போல என் மனம் மகளிரின் காமத்தீயில் விழுந்து அழிகிறது.

3.விளக்குத்தீயில் விழுகின்ற விட்டில் பூச்சியைப் போன்று மகளிர் மொழியில் விழுந்தேன்.

4.நீரானது வற்றிப் போக சிறிய மீன்கள் வாடுதலைப் போன்று நின் கருணைக்குறைவால் துடிதுடிக்கிறேன்.

5.மத்து வைத்து கடையும் போது தயிர் அலைக்கழிவது போல மலங்கள் ஐந்தால் வருந்துபவன்.

6.மலைகள் பல ஒன்று சேர்ந்து தாக்கினாற் போல கொடிய வினைப்பயன்கள் தாக்குகின்றன. இத்துன்பத்திலிருந்து அடியேனை கைவிடாது “அஞ்சேல்” என்று அருள் புரிவாயாக! இவ்வாறு தன்னைக் கைவிடாமல் காக்கவென பல உவமைகள் கூறி விண்ணப்பம் செய்துள்ளார்.

**தீவினையேன்**

ஐம்புல ஆசைகளும் உன்னை விட்டு நீங்குகின்ற அச்சம், தீவினையேனான என் இருபக்கங்களிலும் இருக்கின்றன. என் குற்றங்களை உன் சீரருளால் எவ்வாறு நீக்குவாய் என்று மனம் புழுங்கிடும். ஆகையினால் இந்த எளியேனை கைவிட்டுவிடாதே!

**“இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து**

**நினைப் பிரிந்த**

**விரிதலையேனை விடுதிகண்டாய்”**

என்றுரைக்கின்றார்.

**அடியாரின் பணிவு**

மாணிக்கவாசகர் தம்மை இறைவனிடத்த தாழ்த்தி நாயென்று 68 இடங்களில் திருவாசகத்தில் கூறுகின்றார். ‘கடல் நிறைய நீர் இருப்பினும் நாய்க்கு நக்குத் தண்ணீர்’ என்பது பழமொழி. அது போல இறைவனிடத்து அன்பும் கருணையும் கடல் போல் மிகுந்திருந்தும் அதனைப் பருகும் ஆற்றல் அற்றவன் எனத் தன்னைத் தாழ்த்தி கூறுகிறார்.

**“கடலில் நாய் நக்கி ஆங்கு உன்**

**கருணைக் கடலின் உள்ளம்”**

**தன்னிலைக் கூறல்**

வாதவூரார் ஆகிய மாணிக்கவாசகர் மகளிர்பால் மயக்கம் கொண்டதால் அறியாமையினால் தவற்றினைப் புரிந்ததாகக் கூறுகின்றார். இது தன்னையே தாழ்த்திக் கூறி உலகோர் கூறும் உவமையைப் பாடுகிறார்.

அடியேனின் குற்றங்களைப் பொறுத்து வலிய வந்து ஆட்கொண்ட போதும் நின்னை வந்து சேர்ந்திடும் ‘அறிவு பெறாச் சிறுவன் யான்’ என்கிறார்.

**திருவடிப்பேறு**

சிவபெருமான் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட போதே தனது உடலையும், உயிரையும் அவனுடையதாகவே கொடுத்தார். இதனை,

**“அன்றே என்தன் ஆவியும்**

**உடலும் உடைமை எல்லாமும்**

**குன்றே அனையாய் என்னை ஆட்**

**கொண்ட போதே கொண்டிலையோ?”**

என்று குழைத்த பத்தில் கூறுகின்றார்.திருவடிப் பேறு கிடைக்காமல் மெலிகின்ற எளியேனுக்கு அப்பேறு கிடைக்க அருள்வாயே! ஐம்பொறிகளும் பகைக் கொண்டு வஞ்சிப்பதால் யான் உன் வீரக்கழலணிந்த தாமரை மலர் போலும் திருவடியை விட்டு நீங்கிய என்னை கைவிட்டு விடாதே! என இறைஞ்சுகிறார்.

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550